செ.வெ.எண்:67 நாள்: 25.06.2016

# தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.30,18.91 கோடி மதிப்பீட்டில் உதவி தொகைகள் வழங்கியுள்ளது-மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய்த்துறையின் சார்பில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பல நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (25-06-2016) வழங்கினார்

இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்நலத்துறை அமைச்சர் அவர்கள் 694 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருவாய் துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இலுப்பூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் 73 பயனாளிகளுக்கு ரூ.1,64,250 மதிப்பில் கல்வி உதவித்தொகைக்கான கசோலைகளும், 182 பயனாளிகளுக்கு ரூ.15,62,000 மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலைகளும், 14 பயனாளிகளுக்கு ரூ.12,92,500 மதிப்பில் விபத்து நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 166 பயனாளிகளுக்கு ரூ.20,22,500 மதிப்பில் இறப்பு நிவாரணத்தொகைக்கான காசோலைகளும், 8 பயனாளிகளுக்கு 96,000 மதிப்பில் குணப்படுத்த இயலாத நிலையில் உள்ளவர்களுக்கான உதவித்தொகைக்கான காசோலைகளும், 51 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணைகளும், 200 பயனாளிகளுக்கு ரூ.24,00,000 மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளும், என மொத்தம் 694 பயனாளிகளுக்கு ரூ.75,37,250 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.30,18.91 கோடி மதிப்பீட்டில் 37.18 இலட்சம் பயனாளிகளுக்கு பல்வேறு உதவித்தொகைகள் வழங்கியுள்ளது. விரைவில் பட்டா மாறுதல் திட்டத்தின் கீழ் 61.15 இலட்சம் பட்டாக்கள் மாறுதல் செய்யப்பட்டுள்ளது.மேலும் நமது மாவட்டத்தில், விராலிமலை சட்டமன்ற தொகுதி முழுமைக்கும் உள்ள பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ரூ.310 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டு குடிநீர்த்திட்டம் பணிகள் துவங்கப்பட்டுள்ளது. மேலும் இத்தொகுதி பொதுமக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவே, தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பொதுமக்கள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும



புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் வருவாய்துறையின் சார்பில் நடைபெற்ற விழாவில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் திரு. சு.கனேஷ்,இ.ஆ.ப.,உள்ளார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, தனித்துணை ஆட்சியர் (சிறப்புத் திட்ட அமலாக்கம்) திருமதி. பஞ்சவர்ணம், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. ஜெயபாரதி, வருவாய் கோட்டாட்சியர் திரு.வடிவேல்பிரபு, இலுப்பூர் பேரூராட்சி தலைவர் திரு.குருராஜமன்னார், மதியநல்லூர் ஊராட்சிமன்ற தலைவர் திரு.வி.ராமசாமி, வட்டாட்சியர்கள் திரு.மனோகரன், திரு.தமிழ்மணி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.திருமலை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**